THIRU G. SWAMINATHAN : Sir, may I know from the Hon. Minister the amount outstanding from the Food Corporation of India and the nature of dispute regarding the payment of the same and also the period of delay in terms of months or years in the payment of the tax ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The total demand was Rs. 160.25 lakhs and the tax collected so far is Rs. 80.99 lakhs. The balance outstanding is Rs. 79.26 lakhs. They say that they will pay only from 1st September 1964. We are arguing that they should pay from 18th August 1962 to 15th December 1968 and there is correspondence going on between us.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether the tax is levied on fertilisers only or on any other commodity also?

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is not only on fertilisers but also on foodgrains.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, பாக்கியுள்ள தொகைக்கு, காலங்கடந்த நாட்களுக்கு ஏதாவது வட்டி நிர்ணயிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சட்டப்படி நாம் அவர்களிடத்தில் வசூலிக்க முடியுமென்று சொன்னாலும், மத்திய அரசோடு இதைப்பற்றிச் சுமுகமான பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளலாமென்று கருதி, டெல்லியிலே தமிழக அரசு அதிகாரிகளை வரவழைத்து, அவர்கள் பேசி, இப்போது நாம் சொன்ன அந்தத் தொகையை ஒத்துக்கொண்டு, கொடுத்திருக்கிறார்கள். மிச்சமிருப்பது பற்றிப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். சீக்கிரம் அவைகள் செட்டிலாகிவிடுமென்று நம்புகிறோம்.

Cannon Balls

* 53. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that hundreds of cannon balls were discovered during August 1972 at Palayamkottai ; and

(*b*) if so, the nature of the findings?

[1973 பிப்ரவரி 7

பீரங்கிக் குண்டுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாளையங்கோட்டையில், 1972 ஆகஸ்டு திங்களில் நூற்றுக்கணக்கான பீரங்கிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், என்னென்ன பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 125 பீரங்கிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

(இ) திருநெல்வேலி மாவட்ட காவல்துறை அதிகாரியின் அலுவலகத்தின் நிழற்பட பிரிவுக்கான கட்டடம் கட்டுவதற்கு கடைகால் தோண்டும்பொழுது, 125 பீரங்கிக் குண்டுகள் பூமிக்குள் கண்டெடுக்கப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த பீரங்கிக் குண்டுகள் எந்தக் காலத்தவை என்பதைப் பற்றி ஆராய்ச்சி நடந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, என்னிடத்தில் தகவலில்லை.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, பீரங்கிக் குண்டுகள் என்று சொல்லப்படுகின்றவை பழங்கால முறையிலே பட்டிங்கு வெயிட் இரும்பு பால்கள் போன்ற குண்டுகள்தானே அவை ? அல்லது வேறு மருந்துகள் அடைக்கப்பட்ட குண்டுகளாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அவர்கள் சொல்வது போல் பால்கள் போன்ற குண்டுகள் தான். பால் என்றால் குண்டு தான், குண்டு என்றாலும் பால் தான்.

TRUTH ALONE TRIUMPHS